DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE,
THIRUKALUKUNDRAM.

Case No. CC.113/2024

**P.W**. 1(LW1)

| | | |
|---|---|---|
| Name | : | திருமதி. ராதா |
| Father/Husband Name | : | திரு.லோகநாதன் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது. எதிரி வழக்கறிஞர் ஆஜரில் உள்ளார்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 23.02.2026

முதல் விசாரணை – சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். நான் தற்போது திருக்கழுக்குன்றத்தில் குடியிருந்து வருகிறேன். விபத்தில் இறந்துபோன கார்த்திக் என்னுடைய மகன் ஆவார். அவர் வெல்டிங் வேலை செய்து வந்தார்.

2) கடந்த 2021 ம் வருடம் 19 ம் தேதி ஒரு நாள் என்னுடைய மகன் அவரது இரு சக்கர வாகனத்தில் திருப்போரூருக்கு வேலைக்கு சென்றுவிட்டு வீட்டிற்கு வரும் போது ஆசிரியர் நகர் பஸ் ஸ்டாப் அருகே விபத்து ஏற்பட்டதாக எனக்கு இரவு 8.45 மணிக்கு தகவல் கிடைத்தது. நான் சம்பவ இடம் சென்று பார்த்தபோது அங்கிருந்தவர்கள் ஒரு போர்வெல் லாரி என் மகனின் வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்பட்டதாகவும், அங்கிருந்தவர்கள் என் மகனை 108 ஆம்புலன்ஸ் மூலம் செங்கல்பட்டு

அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்திருப்பதாகவும் சொன்னார்கள். நான் சம்பவ இடத்தில் பார்த்தபோது விபத்து ஏற்படுத்திய லாரி அங்கு நின்றுக் கொண்டிருந்தது. போர்வெல் லாரியின் நெம்பர் எனக்கு ஞாபகம் இல்லை. நான் செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். அங்கு அவரை உள்நோயாளிகாக சிகிச்சையில் இருந்தார். என் மகனுக்கு தலையிலும், உடம்பு முழுவதும் காயம் ஏற்பட்டிருந்தது. பின்னர் மேல் சிகிச்சைக்காக என் மகனை சென்னை ராஜுவ் காந்தி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். என் மகனுக்கு சென்னை ராஜீவ்காந்தி அரசு மருத்துவமனையில் ஒரு நாள் சிகிச்சை அளித்தார்கள். பின்னர் சிகிச்சை பலனில்லாமல் என் மகன் 21.12.2021 ம் தேதி இரவு 11 மணியளவில் இறந்துவிட்டார். இது குறித்து காவல் நிலையத்தில் நான் 20.12.2021 ம் தேதி புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்த புகார் ஆகும். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். **(புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

எனக்கு எழுதப்படிக்க தெரியாது. நான் கொடுத்த புகாரை யார் எழுதினார்கள் என்றால் என்னுடைய உறவினர் காவல் நிலையத்தில் வைத்து எழுதினார். அதில் நான் கையொப்பம் செய்தேன். விபத்து குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும், கேள்விப்பட்டு தான் தெரிந்துக் கொண்டேன் என்றாலும் சரிதான். நான் சம்பவ இடத்தில் என் உறவினர் ஒருவர் சொல்லி தான் விபத்து ஏற்படுத்திய வாகனம் குறித்து தெரிந்துக் கொண்டேன். காவல் நிலையத்தில் போலிசாரும் விபத்து ஏற்படுத்திய வாகனம் குறித்து சொன்னார்கள். போலிசார் சொன்னதன்

பேரில் தான் விபத்து ஏற்படுத்திய வாகனம் போர்வெல் லாரி என்று தெரிந்து கொண்டு தற்போது சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. விபத்தில் இறந்துபோன எனது மகனுக்காக நஷ்டஈடு வேண்டி காவல் நிலையத்தில் போலிசார் சொன்னதன் பேரில் தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open Court read over in the witness in the present of the accused and admitted by the witness to be correct.

(Sd)S.Vineeth
J.M./TKM.

D E P O S I T I O N O F W I T N E S S
( Chapter XXIII Code of Criminal Procedure.)
IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE,
THIRUKALUKUNDRAM.

Case No. CC.113/2024

**P.W**. 2(LW2)

| | |
|---|---|
| Name | : திரு.திருவேங்கடம் |
| Father/Husband Name | : திரு.மகாலிங்கம் |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது. எதிரி வழக்கறிஞர் ஆஜரில் உள்ளார்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 23.02.2026

முதல் விசாரணை – சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். நான் தற்போது திருக்கழுக்குன்றத்தில் குடியிருந்து வருகிறேன். விபத்தில் இறந்துபோன கார்த்திக் என்னுடைய மகனின் மச்சான் ஆவார். நான் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை. என்னுடைய மகன் ராஜேஷ் சொல்லி தான் தெரிந்துக் கொண்டேன்.

2) கடந்த 19.12.2021ம் தேதி இரவு 8 மணியளவில் ஆசிரியர் நகர் அருகே போர்வெல் லாரி மோதி கார்த்திக்கிற்கு விபத்து ஏற்பட்டதாக என் மகன் என்னிடம் சொன்னார். விபத்து குறித்து கேள்விப்பட்டு நான் செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். அதன் பிறகு அவரை சென்னை ராஜிவ்காந்தி அரசு மருத்துவமனையில் மேல் சிகிச்சைக்காக சேர்த்தார்கள். அதன் பிறகு கடந்த 21.12.2021 அன்று சிகிச்சை

பலனில்லாமல் அவர் இறந்துவிட்டார். 22.12.2021 அன்று போலிசார் நடத்திய பிரேத விசாரணையின் போது நான் உடனிருந்தேன். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

விபத்து குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும், கேள்விப்பட்டு தான் தெரிந்துக் கொண்டேன் என்றாலும் சரிதான். போலிசார் சொல்லி தான் விபத்து நடந்த தேதி குறித்து எனக்கு தெரியும். விபத்து குறித்து கேள்விப்பட்டு இறந்தவரின் உடலை பெற்றுக் கொள்வதற்காக காவல் நிலையம் வந்தேன் என்றால் சரிதான். போலிசார் என்னை பற்றிய தகவல்களை என்னிடம் பெறவில்லை என்றாலும் என் மகனிடம் தான் கேட்டுக் தெரிந்துக் கொண்டார்கள் என்றாலும் சரிதான். இது குறித்து என் மகனுக்குத்தான் தெரியும். எனக்கு எதுவும் தெரியாது. இறந்துபோன நபர் என்னுடைய உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open Court read over in the witness in the present of the accused and admitted by the witness to be correct.

(Sd)S.Vineeth
J.M./TKM.